பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 31 செவ்வாய்க்கிழமை 15.03.2022 கதிர் 364

## டில்லி பறந்தார் பஸில்



நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இன்று பிற்பகல் இந்தியத் தலைநகர் புதுடில்லி நோக்கிப் பயணமானார்.

நிதி அமைச்சரின் இந்த இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தில், திறைசேரி செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவும் இணைந்துள்ளார்.

இந்தியாவுடனான ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் ☞2

# ஜனாதிபதி - கூட்டமைப்பினர் பேச்சு திடீரென ஒத்திவைப்பு

### 25இல் நடைபெறும் என அறிவிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவிருந்த பேச்சு திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மேற்படி சந்திப்பு இடம்பெறும் என ஜனாதிபதி செயலகத்தால், கூட்டமைப்பின் தலைமைக்கு இன்று காலை அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் ☞2

# அலையெனத் திரண்ட மக்கள்: முடக்கப்பட்டது கொழும்பு நகர்

## மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தால் திணறுகின்றது அரசு



**அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி இன்று மாபெரும் போராட்டத்தை நடத்துகின்றது. கொழும்பை முற்றுகையிட்டு இந்தப் போராட்டம் பிற்பகல் 3 மணி முதல் முன்னெடுக்கப்படுகின்றது.**

**இதற்கு மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் பெருமளவான மக்கள் கொழும்பு நோக்கிப் படையெடுத்துள்ளனர்.**

**அதன்படி வடக்கு, கிழக்கு, மலையகம் என நாட்டின் நான்கு திசைகளில் இருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் மற்றும் பொதுமக்களும் கொழும்பில் களமிறங்கியுள்ளனர்.** ☞2

## கிளிநொச்சி மீனவர்களுக்கு இந்திய அரசின் உலர் உணவு

(ந.லோகதயாளன்)

இந்திய அரசின் நிதி உதவியில் வழங்கும் மீனவர்களுக்கான உலர்உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் இடம்பெற்றது.

ஜெயபுரம் மீனவர் சங்க அலுவலகத்தில் பிற்பகல் 3 மணியளவில் முதலாவது நிகழ்வும், பூநகரி பிரதேச செயலர் பணிமனையில் பிற்பகல் 4 மணியளவில் இரண்டாவது நிகழ்வும் இடம்பெற்றன.

இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் மற்றும் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து ☞2

## செயற்கைக் கால் பொருத்தும் இலவச முகாம் யாழில் ஆரம்பம்



(இ.கலையமுதன்)

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் பொருத்தும் இலவச முகாம் இன்று யாழ்ப்பாணம் ☞2

## ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை மே மாதத்தில் நடைபெறுமா?

### வினாத்தாள் அச்சிடப் பேப்பர்களுக்குத் தட்டுப்பாடு

(ந.லோகதயாளன்)

ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் திட்டமிட்டவாறு இடம்பெறுமா என சந்தேகிக்கப்படுகின்றது.

சாதாரண தரப் பரீட்சையில் சுமார் 7 லட்சம் மாணவர்கள் தோற்றவுள்ளனர். 7 லட்சம் மாணவர்களுக்கும் 9 பாடங்களுக்கான வினாத்தாள் மற்றும் விடைத்தாள் என்பன பரீட்சைத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு வினாத்தாள் அச்சிடுவதற்கான பேப்பர்கள் மட்டும் சுமார் ஒரு லட்சம் ☞2

## காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீட்டுக்கு அனுமதி

காணாமல்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் போதே அமைச்சர் டலஸ் மேற்படி தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2016ஆம் ஆண்டு 17ஆம் ☞2



## கூட்டமைப்பின் சந்திப்பில் கலந்துகொண்டது ரெலோ

(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான இன்றைய சந்திப்பு இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்ட நிலையில் திட்டமிட்டபடி கூட்டமைப்பின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இன்று மாலை 3.30 மணிக்கு ஜனாதிபதியுடன் இடம்பெறவிருந்த சந்திப்பு தொடர்பில் கூட்டமைப்பினர் காலை கூடிக் கலந்துரையாடினர்.

இதன்போது ஜனாதிபதியுடனான சந்திப்பில் ☞2

## செயற்கைக் கால் பொருத்தும் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். இந்தியத் துணைக் தூதரகத்தின் ஏற்பாட்டில் வலுவிழந்தோருக்குச் சேவை செய்யும் பகவான் மகா வீரர் சஹயட சமித்தி நிறுவனமும், யாழ். மாவட்ட பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புகுழு அலுவலகமும் இணைந்து நடத்தும் ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் முகாம் யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்று யாழ். மாவட்ட முகாமைத்துவ திறன் விருத்தி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முகாமில் கலந்துகொள்ளும் பயனாளிகள் தமது பதிவுகளை பிரதேசசெயலகங்கள் ஊடாக மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன், யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ், இந்திய தூதரக அரசியல் ஆலோசகர் பானு பிரகாஸ்,யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் முரளிதரன், பிரதேச செயலர்கள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

## காணாமல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலக்க காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் பிரகாரம், காணாமல்போன நபர்கள் தொடர்பில் உரிய விசாரணை முன்னெடுக்கப்பட்டு, இறப்புச்சான்றிதழ் அல்லது காணக்கிடைக்கவில்லை என்ற சான்றிதழை வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில், பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்டு, காணக்கிடைக்கவில்லை என்ற சான்றிதழைப் பெற்றுள்ள காணாமல்போனவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு ஒருமுறை மட்டும் ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்.

குடும்ப மீள்வாழ்வுக்காகவும், நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கிலேயே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. நிதி அமைச்சர் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை முன்வைத்துள்ளார்.

காணாமல்போனவர்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கு 25 விசாரணைக்குழுக்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது - என்றார்.

## கூட்டமைப்பின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கூட்டமைப்பின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொண்டதோடு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவும் பங்குகொண்டார்.

இதேநேரம், ஜனாதிபதியுடனான சந்திப்பில் ரெலோ பங்குகொள்ளுமா என்ற கேள்விக்கு மத்தியில் ரெலோவின தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., பொதுச்செயலாளர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேநேரம் இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், இ.சாள்ஸ் நிர்மலநாதன், எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பில் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) ஜனாதிபதியுடனான கூட்டத்தில் பங்குகொள்வதில்லை என்ற ரெலோவின் தீர்மானத்தை அறிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியுடனான சந்திப்பை நான் தனித்து எடுத்தேன் என ஊடகங்கள் சிலவற்றில் செய்திகள் வெளிவந்தன. ஆனால், இந்த முடிவை எடுக்க முன்னர் செல்வம் அடைக்கலநாதன், மாவை.சேனாதிராஜா, சித்தார்த்தனுடன் பேசினேன். அப்போது செல்வம் இதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கவில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

## ஜி.சீ.ஈ. சாதாரணப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றீம் தேவை. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தைப் பெறுவதில் பெரும் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. இருந்தபோதும் பரீட்சைகள் திணைக்களம் நேற்று தமக்கான தேவை விபரத்தை அனுப்பி வைத்துள்ளது.

பேப்பர்கள் ஏப்பரல் மாத ஆரம்பத்தில் கிடைத்தால் வினாத்தாள்களை அச்சிட முடியும் என்று பரீட்சைகள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

## அலையெனத் திரண்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்துக்கு அருகிலிருந்தும், பி.டி. சிரிசேன மைதானத்துக்கு அருகிலிருந்தும் என இரு இடங்களில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டப் பேரணிகள் ஆரம்பமாகியுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவும் மக்களுடன் ஆர்ப்பாட்டப் பேரணியில் இணைந்துள்ளார்.

பேரணியில் மக்கள் சவப்பெட்டியைச் சுமந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ போன்று வேடமிட்டு இந்தப் பேரணியில் சிலர் கலந்துகொண்டுள்ளனர்.

பஸில் போன்று வேடமிட்டவர்கள், என்னால் நாட்டைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது; மன்னித்து விடுங்கள் என ஒப்பாரியுடன் கூறிக்கொண்டு பேரணியில் இணைந்துள்ளனர்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டப் பேரணி காரணமாக கொழும்பின் சில பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு ஹைலெவல் வீதி, மாளிகாவத்தை, மருதானை உள்ளிட்ட பல பகுதிகளில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

## ஜனாதிபதி - .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சக்தியால் கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதன்போது ஜனாதிபதி செயலகம் முன்பாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் அணிதிரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகத்தால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

## டில்லி பறந்தார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கையெழுத்திடும் நோக்கில் அவர் இந்தியா சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடன் மூலம் இலங்கைக்கு அரிசி, கோதுமை மா மற்றும் சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டில் தற்போது நிலவிவரும் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இலங்கைக்கு உதவுவதற்காக இந்திய அரசு 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622

ENGLISH CLASSES

யாழ் நகரில் தனி வகுப்புகள் A/L எடுத்தவர்கள் பெறுபேறுகள் வரமுன் தரமாக பேசும் எழுதும் ஆற்றலை வழங்கும் துரித வகுப்புகள்
G.G.E. O/L - English Literature
Grade 10 & 11 தனி வகுப்புகள்
Language தரமும்
திருத்தப்படும்.



K.Ganesh B.A . 077 7668725

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அரசின் பதுக்கல் வர்த்தகம்

பதுக்கல், கள்ளச் சந்தை, சுத்துமாத்து வியாபாரம் போன்றவற்றில் இதுவரை தனியார் வர்த்தகர்கள், வியாபாரப் பிரகிருதிகள் போன்றோர் ஈடுபடுகின்றமை குறித்துக் கேள்விப்பட்டு இருக்கின்றோம். குறுக்கு வழியில் லாபம் ஈட்டுவதற்காக அவர்கள் இப்படியான வழிகளை நாடுவர். இது இலங்கையின் வர்த்தக வியாபாரத்துடன் பின்னிப்பிணைந்த குணாம்சம்.

ஆனால், பணம் ஈட்டுவதற்காக இதே பதுக்கல் வியாபாரத்தில் அரசுத்துறை ஈடுபடுகின்றது, ஈடுபட்டது என்ற ஆச்சரியமான தகவல் இப்போதுதான் வெளியாகியிருக்கின்றது. அதுவும் நாட்டில் பற்றி எரியும் ஒரு முக்கிய விடயத்தை அரச கூட்டுத்தாபனம் ஒன்று பெரும் பதுக்கலில் ஈடுபட்டது என்பது ஆச்சரியத்தைத் தரும் செய்தி.

மக்களுக்கு மிக மிக அத்தியாவசியமான பொருளை – மக்கள் மணிக்கணக்கில் காத்து நின்று வாங்குவதற்கு முண்டியடித்த நுகர்வுப் பண்டத்தை – விலை அதிகரிப்பை எதிர்பார்த்து, மக்களுக்கு வழங்காமல் அரச கூட்டுத்தாபனம் ஒன்று பதுக்கியது என்பதும் –

இப்போது, பெரும் விலை உயர்வுக்குப் பின்னர், அந்தப் பண்டத்தைத் தாராள விநியோகத்துக்கு அது விடுவித்து இருக்கின்றது என்பதும் –

அதிர்ச்சி தரும் உண்மைகளாகும்.

விலை உயர்வுக்கு முன் அப்பொருள் கையிருப்பு இல்லை என்று குறிப்பிட்ட – சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு பொறுப்பான – அமைச்சர் இப்போது பாரிய விலை அதிகரிப்புக்கு பின்னர் அது தாராளமாகக் கையிருப்பில் உள்ளது என்று அறிவிப்பதன் மூலம் பதுக்கல் இடம்பெற்றமைக்கான சாத்தியத்தை உறுதிப்படுத்துகிறார்.

பெற்றோல், டீசல் போன்ற அத்தியாவசிய எரிபொருள் விவகாரத்தில்தான் இந்த பதுக்கல் கைங்கரியம் அரங்கேறி இருக்கிறது என செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

20 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், ஏழாயிரம் மெற்றிக் தொன் சுப்பர் டீசல், ஆறாயிரம் மெற்றிக் தொன் சுப்பர் பெற்றோல் என்பவற்றை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறைத்து – பதுக்கி – வைத்து, விலையை அதிகரித்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பெற்றோலிய ஊழியர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

“ஒரு கறுப்புச் சந்தை வியாபாரி கூட இவ்வாறான சட்ட விரோத கொடுக்கல் – வாங்கலில் ஈடுபடவில்லை.

“எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் செலுத்தப்பட்ட 55 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருள் இறக்கப்படாமல் கப்பலில் வைக்கப்பட்டிருந்தது.

“கூட்டுத்தாபனத்தில் உள்ள கிடங்குகளில் 20 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல், 7 ஆயிரம் மெற்றிக் தொன் சுப்பர் டீசல் மற்றும் 6 ஆயிரம் மெற்றிக் தொன் சுப்பர் பெற்றோல் இருந்தும் – மிகவும் தட்டுப்பாடான அந்தக் காலத்தில் அவை சந்தைக்கு – விநியோகத்துக்கு –விடுவிக்கப்படவில்லை.

“எரிபொருளுக்கு உண்மையாகவே தட்டுப்பாடு ஏற்படவில்லை. நாட்டுக்கு வந்த எரிபொருளுக்குப் பணம் செலுத்தப்பட்டி ருந்தது. எனினும், அரசு விலை அதிகரிக்கும் வரை பெற்றோலை விநியோகிக்கவில்லை – என்று உண்மையைப் போட்டு உடைத்திருக்கின்றார் அவர்.

எரிபொருள்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்ட பின்னர் தற்போது நாட்டில் போதிய அளவு எரிபொருள்கள் கையிருப்பில் இருக்கின்றன, அவை தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன என்று செய்தியாளர்களைக் கூட்டி நேற்று அறிவிக்கின்றார் பெற்றோலிய வள அமைச்சர் காமினி லொக்குகே.

அரச கூட்டுத்தாபனமே பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டால் நாடு திருந்துவது எங்ஙனம்?

# மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கைகள்

## அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க திட்டவட்டம்



மூடப்பட்டுள்ள அனைத்து உள்நாட்டுத் தொழிற்சாலைகளையும் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

மூடப்பட்டிருந்த எம்பிலிப்பிட்டிய கடதாசி தொழிற்சாலை ஒன்பது வருடங்களின் பின்னர் கடந்த திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான நிகழ்வில் அமைச்சர் உரையாற்றினார்.

இதன் மூலம் வருடத்துக்கு 75 ஆயிரம் மெற்றிக் தொன் கடதாசியை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. உள்நாட்டு முதலீட்டாளர் ஒருவருடன் உடன்படிக்கை செய்து இந்தத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிக்கக் கிடைத்தமை மிகவும் முக்கியமான விடயம் என்றும் மூடப்பட்டுள்ள அனைத்து உள்நாட்டுத் தொழிற்சாலைகளையும் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்ததாகவும் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உள்நாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் அரசாங்கத்தின் மத்தியஸ்தத்துடன் முதலீடுகளை மேற்கொண்டு தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

# பொறியியலாளராகித் தமிழ் மக்களுக்கு சேவையாற்றுகின்றமையே என் இலக்கு!

## அகில இலங்கை ரீதியில் முதல் இடம்பிடித்த யாழ்.மாணவன்



புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகிய நிலையில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த தமிழ்செல்வன் கஜலக்சன் 198 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில் எதிர்காலத்தில் தான் பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்ற விரும்புகிறேன் எனவும் அந்த மாணவன் தெரிவித்துள்ளார்.

மேலும் அம்மா, அப்பா மற்றும் பாடசாலை ஆசிரியர்களின் ஊக்கமே தனது வெற்றிக்கு காரணம் என்றும் மாணவன் பெருமிதப்பட்டார்.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த 12 மனுக்கள் விசாரணை ஆரம்பித்தது உயர் நீதிமன்று

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான புலனாய்வுத் தகவல்கள் இருந்தும் அதிகாரிகள் அதனைத் தடுக்கத் தவறியமையால், தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 12 மனுக்கள் மீதான விசாரணை உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, புவனேக அலுவிஹாரரே, முர்து பெர்னாண்டோ, எல்.டி.பி. தெஹிதெனிய, எஸ்.துரைராஜ, மற்றும் காமினி அமரசேகர ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என கோரி மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

# சவுதி அரசுக்கு இலங்கை அரசு நேரடி முதலீட்டுக்காக அழைப்பு

பல்வேறு துறைகளில் நேரடி முதலீடுகளை மேற்கொள்ளுமாறு சவுதி அரசுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் ஸஊதிடம் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவின் வெளிநாட்டு அமைச்சருடன் திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் துறைமுக நகர் சார்ந்த வெளிநாட்டு முதலீடுகளுக்கான வாய்ப்புகள் தொடர்பாக ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

இதேவேளை தமது நாடும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் சவுதி வெளிநாட்டு அமைச்சர் தெரிவித்ததோடு இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்தச் சந்திப்பில் சவுதி அரேபிய தூதுவர் அப்துல் நசீர் அல் பர்ஹாத், சவுதி வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அப்துல் ரஹ்மான் அல் தாவூத், வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் மற்றும் வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

செவ்வாய்க்கிழமை 15.03.2022

# உக்ரைனின் இரண்டாவது மேயர் கடத்தல்

உக்ரைனின் டினிப்ரோருட்னே நகரின் மேயர் கடத்தப்பட்டுள்ளார் என உக்ரைனிய வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு 18ஆவது நாளாக தொடர்ந்து வரும் சூழலில், உக்ரைனின் டினிப்ரோருட்னே நகரின் மேயர் கடத்தப்பட்டுள்ளார் என உக்ரைனிய வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.நேற்று மெலிடோபோல் என்ற நகரின் மேயர் கடத்தப்பட்டார் என்று தெரிவித்திருந்த நிலையில் இன்று மற்றொரு நகர மேயர் கடத்தப்பட்டுள்ளார் என உக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். வெள்ளிக்கிழமையன்று உக்ரைனின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஒரு சிறிய நகரமான மெலிடோபோல் நகரின் மேயர் பெடோரோவை ரஷ்யப் படையினர் கடத்தி உள்ளனர் என உக்ரேனிய அதிகாரிகள் காணொலி வெளியிட்டிருந்தனர்.கடத்தப்பட்ட மேயரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று உக்ரைனின் அதிபர் வோலோடிமிர் செலன்ஸ்கி வலியுறுத்தியிருந்த நிலையில் தற்போது மீண்டும் நகர



மேயர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்று உக்ரைன் தெரிவிக்கிறது. இது தொடர்பாக உக்ரைனின் வெளியுறவுத்துறை அமைச் சர் டிமிட்ரி குலேபா கூறுகையில் ரஷ்ய போர் குற்றவாளிகள் யேஹென் மட்வேயேய் கடத்திச் சென்றனர்.

உள்ளூர் மக்களின் ஆதரவை பெற முடியாததால், ரஷ்ய படையினர் பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகிறார்கள். உக்ரைன் மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான ரஷ்ய பயங்கரவாதத்தை நிறுத்த அனைத்து நாடுகளையும் சர்வதேச அமைப்புகளையும் நான் அழைக்கிறேன், என்றும் அவர் கூறியுள்ளார்.18 ஆவது நாளாக நடக்கக்கூடிய உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பில், இதுவரை சுமார் 3,687 உக்ரைன் இராணுவத்திற்கு தொடர்பான இடங்கள், 99 விமானங்கள், 1,194 தாங்கிகள் மற்றும் கவச போர் வாகனங்கள் மற்றும் 443 பீரங்கித் துப்பாக்கிகள் அழிக்கப்பட்டுள்ளன என ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்ததாக ரஷ்ய செய்தி நிறுவனமான இன்டர்பாக்ஸ் தெரிவித்துள்ளது.

இதேபோல் சுமார் 12,000 இற்கும் மேற்பட்ட ரஷ்ய படைவீரர்கள் மற்றும் ரஷ்யாவின் 374 தாங்கிகள், 1,226 கவச போர் இயந்திரங்கள் மற்றும் 140 பீரங்கி அமைப்புகள் அழிக்கப்பட்டுள்ளன என உக்ரைனிய இராணுவம் தெரிவித்து வருகிறது.

ஆனால் இந்த இருதரப்பு தகவல்களையும் பிபிசியால் சுயாதீனமாக உறுதி செய்ய முடியவில்லை.

## உக்ரைன் மேயர்கள் கடத்தப்பட்ட விவகாரம்; ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம் தெரிவிப்பு




உக்ரைனின் நகர மேயர்கள் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் போன்டெல்லெஸ் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார். தென் கிழக்கு நகரமான டினிப்ரோ நகர மேயரான யேவென் மட்வியேவ் என்பவரை, ஆயுதமேந்திய நபர்கள் கடத்திச் சென்றனர் என உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேபோல் கடந்த வெள்ளிக்கிழமையன்று மெலிடோபோலின் மேயர் இவான் பெடோரோவ் கடத்தப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைக்கான உயர் பிரதிநிதி ஜோசப் பொரெல் போன்டெல்லெஸ் இது குறித்து கூறுகையில், மெலிடோபோல் மற்றும் டினிப்ரோருட்னே மேயர்களை, ரஷ்ய ஆயுதப்படைகள் கடத்தியமையை ஐரோப்பிய ஒன்றியம் கடுமையாகக் கண்டிக்கிறது.

இது உக்ரைனில் உள்ள ஜனநாயக நிறுவனங்கள் மீதான மற்றொரு தாக்குதல் மற்றும் ஒரு இறையாண்மை கொண்ட நாட்டில் சட்டவிரோத மாற்று அரசாங்க கட்டமைப்புகளை நிறுவுவதற்கான முயற்சியாகும் என கூறினார்.

3 நாள்களுக்கு முன் கைது செய்யப்பட்ட உக்ரைனின் மெலிடோபோல் நகர மேயர் இவான் பெடோரோவுக்கு பதிலாக, கலினா டேனில்சென்கோ என்பவரை இடைக்கால மேயராக ரஷ்யப் படை நியமித்துள்ளது. இதையடுத்து உள்ளூர் தொலைக்காட்சியில் உரையாற்றிய அவர், பழைய மேயர் இவானை விடுவிக்க வலியுறுத்தி போராட்டத்தில் பொதுமக்கள் ஈடுபடவேண்டாம் எனவும், அது 'தீவிரவாதம்' எனவும் கூறினார்.அத்துடன் நகரில் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்தார்.



## புடினுடன் பேச்சு நடத்த ஜெலன்ஸ்கி மீண்டும் அழைப்பு

அமெரிக்காவின் தலையீடு இல்லாமல் இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் நேருக்கு நேராகப் பேச்சு நடத்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார்.

ஏற்கனவே பலமுறை அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.இதனிடையே உக்ரைன் மற்றும் ரஷ்யா உயர் அதிகாரிகள் நேற்று காணொலி வாயிலாக பேச்சு நடத்தினர். இதில் மனித நேய பாதைகளை உருவாக்குவது குறித்து ஆலோசனை நடைபெற்றது. போர் உக்கிரமாக நடைபெறும் மாரியுபோல் நகரில் பொதுமக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற மனித நேயப்பாதை அமைப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இதனிடையே கிவ் நகர் அருகே பொதுமக்களை வெளியேற்றும் போது ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தியதில் ஒரு குழந்தை உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர் என உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது


## பொது மக்களின் பெயர்களை விண்வெளிக்கு அனுப்புவதற்கு வாய்ப்பளிக்கின்றது நாசா




சாதாரண மனிதர்கள் விண்வெளிக்கு பயணிப்பது கடினம். அவர்களும் பயணிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்த நாசா இந்தாண்டு விண்ணில் ஏவ உள்ள ஓரியன் விண்கலத்தில் பொது மக்கள் பதிவு செய்யும் பெயர்களை பிளாஷ் டிரைவில் வைத்து அனுப்ப உள்ளது. இலவச பதிவான இவற்றில் 10 லட்சம் பேர் தங்கள் பெயர்களை இணைத்துள்ளனர்.

ஆர்டெமிஸ் என்ற பெயரில் சர்வதேச மனித விண்வெளிப் பயணத் திட்டத்தை அமெரிக்கா துவங்கியுள்ளது. 2025க்குள் மனிதர்களை நிலவிற்கு, குறிப்பாக நிலவின் தென் துருவத்திற்கு அனுப்புவது இதன் நோக்கம். அதற்கு முன் பாக பரிசோதனை முயற்சியாக ஆர்டெமிஸ் ஒன்று திட்டத்தை இந்தாண்டு செயல்படுத்த உள்ளனர். இத்திட்டத்தில் மனிதர்களை அனுப்பப்போவது இல்லை. மனிதர்கள் செல்லக்கூடிய ஓரியன் விண்கலத்தை எஸ்.எல்.எஸ்., எனும் உலகின் சக்திவாய்ந்த ராக்கெட் மூலம் புளோரிடாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து மே அல்லது ஜீன் மாதம் ஏவ உள்ளனர். இந்த விண்கலம் சுமார் 6 வாரங்களில் 4.5 லட்சம் கிலோ மீற்றர் பயணித்து நிலவை கடந்து ஆயிரக்கணக்கான கிலோமீற்றர்கள் சென்று திரும்பும். மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட விண்கலம் இதுவரை செல்லாத அளவிற்கு ஆழ்ந்த விண்வெளிக்கு செல்லும். அப்போது விண்கலம் உள்ளிட்ட அமைப்புகள் சரியாக இயங்குகின்றனவா என பரிசோதிக்கப்படும். பின்னர் நிலவை சுற்றி வரும் ஓரியன் விண்கலம் பூமியை நோக்கி பயணித்து கலிபோர்னியா கடலில் ஸ்பிளாஷ் டவுன் முறையில் பாதுகாப்பாக தரையிறங்கும். இந்த பயணத் திட்டத்தில் மற்ற பயன்பாடுகளுக்கான கியூப்சாட் செயற்கைக் கோள்களும் வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்படும்.

இந்நிலையில் பொது மக்களின் பெயர்களை சேகரித்து நாசா ஓரியன் விண்கலத்துடன் நிலவை சுற்றி வர வைக்க உள்ளது. இதற்கான பதிவு கடந்த மார்ச் 11 தொடங்கி நடைபெற்று வருகிறது. https://www.nasa.gov/sendyour name with artemis/ என்ற நாசாவின் தளத்திற்கு சென்று பெயர், தந்தை பெயர், தபால் பெட்டி எண் அளித்தால் விமான டிக்கெட் போல போர்டிங் பாஸ் கி.யூ.ஆர். கோட்டுடன் தயாராகிறது. அதன்பின் விண்கலத்துடன் நமது பெயரும் பூமியையும், நிலவையும் சுற்றி வரும். அதை நினைக்கும் போது விண்வெளிக்கு செல்லவே டிக்கெட் கிடைத்தது போன்ற பரவசம் ஏற்படுகிறது.



# போரை தீவிரப்படுத்த சீனாவிடம் உதவிகளை கோரும் ரஷ்யா

உக்ரைனில் போரை தீவிரப்படுத்த சீனாவிடம் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை ரஷ்யா கோரி வருவதாக பைனான்சியல் டைம்ஸ் மற்றும் நியூயோர்க் டைம்ஸ் நாளிதழ்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பெயர் வெளியிட விரும்பாத அமெரிக்க அதிகாரிகளை மேற்கோள் காட்டி, படையெடுப்பு தொடங்கியதில் இருந்து ரஷ்யா சீன உபகரணங்களை கோரி வருவதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ரஷ்யா எந்த வகையான ராணுவத் தளவாடங்களை சீனாவிடம் கோருகிறது என்பதைக் குறிப்பிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர் எனவும் அந்தச் செய்தி கூறுகிறது. ரஷ்யாவின் கோரிக்கையை ஏற்று, அந்த நாட்டுக்கு உதவி செய்வதற்கு சீனா தயாராகி வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே போல நியூயோர்க் டைம்ஸிலும் ஒரு செய்தியில், பொருளாதாரத்தடைகளின் தீவிரத்தைத் தணிக்கும் வகையில் பொருளாதார ரீதியிலான உதவிகளை சீனாவிடம் ரஷ்யா கோரியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, வொஷிங்டனில் இருக்கும் சீன தூதரக செய்தித்தொடர்பாளர் பதில் அளிக்கையில், 'ரஷ்யாவுக்கு சீனா உதவுவது குறித்த எந்த தகவலையும் நான் இது வரை கேள்விப்படவில்லை' என்று மறுப்பு தெரிவித்தார். இந்த நிலையில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் திங்கட்கிழமையன்று ரோம் சென்று சீனாவின் உயர்மட்ட தூதரக அதிகாரி யாங் ஜீச்சியை சந்திப்பார் என்று வெள்ளை மாளிகை நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா - உக்ரைன் மோதலில் சீனா இதுவரை தன்னை நடுநிலை வகிப்பதாக காட்டுவதற்கே முற்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை மற்றும் பொது அவையில் நடுநிலை வகித்தது. ரஷ்யாவின் படையெடுப்பை இதுவரை வெளிப்படையாகக் கண்டிக்கவில்லை.

# மத்திய அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை மீண்டும் போராட்டத்தை அறிவித்தன விவசாய சங்கங்கள்



இந்திய அரசு கொண்டுவந்த மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக தலைநகர் புதுடெல்லி எல்லைப் பகுதிகளில் ஒரு வருடத்துக்கும் மேலாக சம்யுக்தா கிசான் மோர்ச்சா தலைமையிலான விவசாய சங்கங்கள் தொடர் போராட்டத்தை நடத்தியிருந்தன.

இதையடுத்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் மூன்றுவேளாண்சட்டங்களையும் இந்திய மத்திய அரசு வாபஸ் பெற்றது. அத்துடன், விளை பொருள்கள் மீதான குறைந்தபட்ச ஆதார விலைக்கு மசோதா கொண்டுவருவது பற்றி ஆராய்ந்து முடிவெடுக்க குழு அமைக்கப்படும், விவசாயிகள் மீதான வழக்குகள் வாபஸ்பெறப்படும், மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ராவை அமைச்சரவையிலிருந்து நீக்குவது உள்ளிட்ட வாக்குறுதிகளையும் இந்திய மத்திய அரசு அளித்திருந்தது. இதையடுத்து போராட்டத்தைக் கைவிட்ட பஞ்சாப் உள்ளிட்ட மூன்று மாநில விவசாயிகளும் தமது சொந்த ஊர்களுக்குத் திரும்பினர்.

போராட்டம் கைவிடப்பட்டு நீண்ட நாள்களாகியும் இந்திய மத்திய அரசு கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டினை விவசாய சங்கங்கள் தொடர்ந்து முன்வைத்துவந்தன.

இந்தநிலையில் டெல்லியில் உள்ள தீன் தயாள் உபாத்யாய் அரங்கில், சம்யுக்தா கிசான் மோர்ச்சா தலைமையிலான விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தையடுத்து, சம்யுக்தா கிசான் மோர்ச்சா வெளியிட்டுள்ள அறிக்கையில், வரும் 21 ஆம் திகதி, நாடு தழுவிய போராட்டத்தை நடத்த இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்குப் பின்னரும் அரசு வழங்கிய முக்கிய உத்தரவாதங்களை செயல்படுத்தவில்லை என்பது அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏப்ரல் 11 முதல் 17 வரையான காலப்பகுதியில் குறைந்தபட்ச ஆதார விலை உத்தரவாதத்தினை அளிக்கக் கோரும் வாரத்தைக் கடைப்பிடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டபூர்வ உத்தரவாதம் கோரி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடு செய்யவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நியூட்ரினோ ஆய்வகத் திட்டத்தைக் கைவிடவேண்டும் இந்தியப் பிரதமருக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் கடிதம்



தேனி மாவட்டம் பொட்டிபுரத்தில் நியூட்ரினோ ஆய்வு மையம் அமைப்பதற்கு இந்திய மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இந்தியாவில் முதல் முறையாக அமைக்கப்படும் ஆய்வகம் இது என்பது குறிப்பிடத்தக்கது. நியூட்ரினோ ஆய்வகத்தால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் வராது என இந்திய மத்திய அணுசக்தித் துறை தெரிவித்திருக்கிறது.

இந்த நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்தில், தேனி மாவட்டம் பொட்டிபுரம் கிராமத்தில் நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கக்கூடாது.

நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும். நியூட்ரினோ ஆய்வகம் அமைக்கும் திட்டத்தால் தேனி மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படும், என அவர் தெரிவித்துள்ளார்.

## சீக்கிய ஊழியர்கள் விமான நிலையங்களுக்கு கிர்பான் கத்தியை கொண்டு செல்ல அனுமதி



விமானப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் சீக்கிய ஊழியர்கள் விமான நிலைய வளாகத்திற்குள் கிர்பான் எனப்படும் வளைந்த கத்தியை எடுத்துச்செல்ல இந்திய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அலுவலகம் அனுமதித்துள்ளது.

விமானப் போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் சீக்கிய ஊழியர்கள் எந்தவொரு இந்திய விமான நிலைய வளாகத்திலும் கிர்பானை எடுத்துச் செல்ல முடியாது என கடந்த 4ஆம் திகதி விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அலுவலகம் தடைவிதித்தது. இந்த உத்தரவுக்கு முன்னணி சீக்கிய அமைப்பான ஷிரோமணி குருத்வாரா பர்பந்தக் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், 12 ஆம் திகதி அந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது.

சீக்கியர்கள் தங்கள் மத நம்பிக்கையின்படி கிர்பான் எனப்படும் வளைந்த கத்தியை அணிந்திருப்பது வழக்கமாக உள்ள நிலையில், மார்ச் 4 ஆம் திகதி வெளியிடப்பட்ட உத்தரவில், கிர்பானை சீக்கியப் பயணிகள் மட்டுமே எடுத்துச் செல்ல முடியும் என்றும், அந்த கத்தியின் மொத்த நீளம் 9 அங்குலத்திற்கு மேற்படாமலும், அதன் கூர்மையான பாகத்தின் நீளம் 6 அங்குலத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, இந்தியாவிற்குள் இந்திய விமானங்களில் விமானத்தில் பயணிக்கும் போது மட்டும் கிர்பான் அனுமதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

சீக்கிய பயணிகளுக்கு மட்டுமே இந்த விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால், விமான நிலையத்தின் உள்நாட்டு அல்லது சர்வதேச முனையத்தில் பணிபுரியும் சீக்கியர் உட்பட அனைத்து ஊழியர்களும் கிர்பானை கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள், என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது.

அதன்பின்னர் மார்ச் 9 ஆம் திகதி ஷிரோமணி குருத்வாரா பர்பந்தக் குழுத் தலைவர் ஹர்ஜிந்தர் சிங் தாமி, சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில், மார்ச் 4 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது சீக்கிய உரிமைகள் மீதான தாக்குதல், என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இதனையடுத்து, இந்திய விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு அலுவலகம், முந்தைய உத்தரவில் திருத்தம் செய்து மார்ச் 12 ஆம் திகதி புதிய விதிமுறையை வெளியிட்டது. அதில், சீக்கிய பணியாளர்கள் விமான நிலையத்திற்கு கிர்பானைக் கொண்டுவரக் கூடாது என்ற பத்தியை நீக்கியுள்ளது.

## கொரோனாவிலிருந்து ஒபாமா குணமடைய பிரதமர் நரேந்திர மோடி பிரார்த்தனை



அமெரிக்காவின் முன்னாள் அதிபரான பாரக் ஒபாமாவிற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாப் பரிசோதனை செய்ததில் தனக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

தானும் தனது மனைவி மிச்செல் இருவரும் கொரோனாத் தடுப்பூசி பூஸ்டர் பெற்றுக்கொண்டிருந்தார் எனவும், அவருக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதியாகியுள்ளதாகவும், தொற்று கள் குறைந்தாலும்கூட அனைவரும் விரைவில் தடுப்பூசி செலுத்திக் கொள்ளவேண்டும் எனவும் அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபரான பாரக் ஒபாமா விரைவில் குணமடையவும், பூரண நலம்பெற வேண்டும் எனவும் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறேன் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

## காங்கிரஸின் கட்டமைப்பு பா.ஜ.கவுக்கு இணையில்லை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் கருத்து



திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையில் நடைபெற்ற கட்சி நிர்வாகி இல்லத் திருமண விழாவில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்தி சிதம்பரம் பங்கேற்றார்.

அதன்பின்னர் ஊடகவியலாளர்களது கேள்விகளுக்கு அவர் பதிலளித்திருந்தார்.

அண்மைய தேர்தல்களில் காங்கிரஸ் சந்தித்துள்ள தோல்விகள் குறித்து அவரிடம் ஊடகவியலாளர்கள் வினா எழுப்பியபோது, காங்கிரஸின் கட்டமைப்பு பா.ஜ.கவுக்கு இணையாக இல்லாததால் அதை மாற்றியமைக்க வேண்டும் என்று கார்த்தி சிதம்பரம் கருத்து தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்தத் தலைவருமான சிதரூர் கூறியமையைப்போல் காங்கிரஸ் கட்சியை சீரமைத்து வலுவான அரசியல் இயக்கமாக உருவெடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்றும் கார்த்தி சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார்.





# சுகாதார ஊழியர்கள் நேற்று மட்டக்களப்பிலும் கவனவீர்ப்பு

நாடளாவிய ரீதியில் சுகாதார துறை ஊழியர்கள், நேற்று ஒரு மணிநேர பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தமையுடன், கவனவீர்ப்புப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம், சுகாதார தொழில் வல்லுநர்கள் சம்மேளனம் உட்பட பல சுகாதாரத் தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டங்களை முன்னெடுத்தன.

நேற்று நண்பகல் 12 மணி தொடக்கம் 1 மணி வரையில் இப்போராட்டங்கள் நடத்தப்பட்டன. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக பதாகைகளை ஏந்தியவாறு, மருந்து மாபியா கொள்ளைகளை நிறுத்து, பதவி உயர்வுகளை வழங்கு, சம்பள முரண்பாட்டை நீக்கு என கோஷங்களை எழுப்பி சுகாதாரத் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## களுவாஞ்சிகுடியிலும் கவனவீர்ப்பு



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை முன்பாகவும் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து 1 மணி வரையில் பதாகைகளை ஏந்தியவாறு தாதியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்ய அமைச்சரவைப் பத்திரத்தை வழங்குக, திருத்தியமைத்த சம்பள முறைமையை தாதியபட்டதாரிகளுக்கு வழங்குக, சம்பள முரண்பாட்டை நீக்குக, சுகாதார நிர்வாக சேவையில் தொழில் வல்லுநர்களை உள்ளடக்குக, விசேட கடமைக் கொடுப்பனவை 10,000 ரூபாயாக வழங்குக மற்றும் பதவிஉயர்வுகளைதாமதமின்றி வழங்குக உள்ளிட்ட பல வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாதியர்கள் இதன் போது ஏந்தியிருந்தனர்.

## திருமலையிலும் ஆர்ப்பாட்டம்



சுகாதார நிபுணர்களின் கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கக் கோரி தொழில்சார் சுகாதார வைத்தியர்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் நேற்றைய தினம் மதியம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு முன்பாகவும் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய், அரசு எமக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்று, மேலதிக நேர கொடுப்பனவுகளைப் பெற்றுத்தா, 2006 ஆம் ஆண்டு சம்பள பரிசீலனையை நடைமுறைப்படுத்து, வேலை நாள்களை ஐந்து தினங்களாக மாற்றியமை மற்றும் பதவி உயர்வுகளை உரிய நேரத்தில் பெற்றுத்தா என்ற வாசகங்கள் அமைந்த பதாகைகளை ஏந்திய வண்ணம் அவர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

# முள்ளிமலையில் புத்தர் சிலை நாட்டும் குழு விடாது முயற்சி!

## எதிர்ப்பால் இம்முறையும் திரும்பியது





(பாறுக் ஷிஹான்)

முள்ளிமலையை அண்டிய பகுதியில் ஏற்கனவே புத்தர் சிலை வைக்க முயற்சிக்கப்பட்ட இடத்துக்கு மீண்டும் தேரர் குழுவினர், நேற்று முன்தினம் மாலை வருகை தந்திருந்த நிலையில், தகவலறிந்து அப்பகுதி இளைஞர்கள் அங்கு ஒன்றுகூடியமையால் அக்குழுவினர் திரும்பிச் சென்றனர்.

அம்பாறை, அட்டாளைசேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை முள்ளிமலை பிரதேசத்தில்உள்ள காணியில்புராதன சின்னங்கள் உள்ளன எனத் தெரிவித்து, பௌத்த பிக்குகளும் சிங்கள இளைஞர்கள் சிலரும் கடும் பாதுகாப்புடன் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டு, கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி புத்தர் சிலை வைக்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

இதன்போது சம்பவ இடத்தில் அப்பகுதி மக்கள் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் மேற்கொண்ட எதிர்ப்பு முயற்சியின் பலனாக தேரர் தலைமையிலான குழு திரும்பிச் சென்றது.

இந்நிலையில், மீண்டும் தேரர் தலைமையில் கடும்பாதுகாப்புக்குமத்தியில்குழுஅவ்விடத்துக்கு நேற்று முன்தினம் மாலை வருகை தந்திருந்தது. இந்நிலையில், அவ்விடத்துக்கு முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர், அட்டாளைசேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ. அன்ஸில், பிரதேச மக்கள் மற்றும் இளைஞர்கள் எனப் பலரும் ஒன்று கூடி வெளியிட்ட எதிர்ப்பை அடுத்து அவர்கள் அங்கிருந்து சென்றனர்.

# வன்னி ஹோப் நிறுவனத்தினால் வீடுகள் திருமலை கப்பல்துறையில் கையளிப்பு





(ஹஸ்பர்)

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நிரந்தர வீடுகளற்ற குடும்பங்களுக்கு பாதுகாப்பானதும் நிரந்தரமானதுமான வீடுகள் வழங்கும் 'வாழ்வதற்கான இல்லறம்' செயற்றிட்டத்தின் கீழ் இரு நிரந்தர வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் கப்பல் துறை கிராமத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற – தகரக் கொட்டில்கள் மற்றும் ஓலைக் குடிசைகளில் மிக நீண்டகாலம் கஷ்டப்பட்டு வாழ்ந்துவரும் – குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை நிர்மாணித்து பாதுகாப்பானதும் கௌரவமானதுமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் வன்னி ஹோப் நிறுவனமும் திருகோணமலை மக்கள் சேவை மன்றமும் இணைந்து இன, மத, பிரதேச வேறுபாடுகளின்றி வீடுகளை நிர்மாணித்து வழங்கி வருகின்றன. இந்த திட்டத்தின் கீழ் திருமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கப்பல்துறை கிராமத்தில் இரு ஏழை குடும்பங்களுக்கே இவ்வீடுகள் நிர்மாணித்து வழங்கி வைக்கப்பட்டன.இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்த வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சன் சிவஞானம், அதன் பணிப்பாளர் டாக்டர் மாலதி வரன் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எஸ். எம். பாயிஸ், கோவில் நிர்வாகிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# பாடசாலையில் உணவு உட்கொண்ட 9 மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம்

## வடமுனை ஊத்துச்சேனை வீரநகரில் சம்பவம்

மட்டக்களப்பு, எல்லைக் கிராமமான வடமுனை ஊத்துச்சேனை வீரநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், மாணவர்களுக்கு நேற்று வழங்கப்பட்ட உணவை உண்ட 9 மாணவர்கள் வாந்தி எடுத்து மயக்கமுற்ற நிலையில், வெலிகந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 9 வரையான 64 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில், இங்கு கல்வி கற்றுவரும் மாணவர்களுக்கு, கல்வி அமைச்சின் மதிய போசன உணவு வழங்கும் திட்டத்தின் கீழ், உணவை தனியார் ஒருவரிடமிருந்து பெற்று பாடசாலை நிர்வாகம் வழங்கி வருகின்றது.

வழமைபோல நேற்றுக் காலை சோறும், சோயாமீற் கறியும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதையடுத்து, அதனை மாணவர்கள் உட்கொண்ட பின்னர் சில மாணவர்கள் வாந்தி எடுத்து மயக்கமடைந்தனர். இதனால், அங்கு மாணவர்களுக்கிடையே பதற்ற நிலை ஏற்பட்டது. இதனையடுத்து வாந்தியெடுத்த 9 மாணவர்களும்ம் உடனடியாக வெலிகந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்யைளிக்கப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டு மக்களை இந்த குடும்ப ஆட்சி படுபாதாளத்துக்குள் தள்ளியுள்ளது!

## உதயகுமார் எம்.பி. சாடல்

ஆசியாவின் அதிசயமான நாட்டில் வாழவைப்போம் என இலங்கை மக்களுக்கு தேர்தல் காலத்தில் உறுதி யளிக்கப்பட்டது. ஆனால் இன்று ஆசியாவின் படு பாதாளத்துக்குள் நாட்டு மக்களை இந்த குடும்ப ஆட்சி தள்ளியுள்ளது. - என்று தொழிலாளர் தேசிய சங்கத் தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் குற்றஞ் சாட்டினார்.

அத்துடன், நாட்டு மக்களின் தோழன் சஜித், மலை யக மக்களின் காவலன் திகா. எனவே, இரட்டை குழல் துப்பாக்கிபோல நாட்டையும், மக்களையும் இவ் விருவரும் பாதுகாப்பார்கள் எனவும் உதயகுமார் எம்.பி. குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டில் இன்று பொருள்களின் விலைகள் நாளாந்தம் அதிகரித்துவரு கின்றன. நாட்டின் பொருளாதாரம் மட்டும் அல்ல வீட்டின்பொருளாதாரமும்பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பெண்களுக்கே அதிக பாதிப்பு. இந்த அரசின் தான்தோன்றித்தனமான நடவடிக்கை காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலை என்றுமில்லாத வகை யில் அதிகரித்துள்ள நிலையில் அடுத்துவரும் நாள்களில் சமையல் எரிவாயுவின் விலையும் 800 ரூபாவால் அதிகரிக்கப்படும். ஏற்கனவே நாட்டு மக்கள் பட்டினியால் வாடுகின்றனர். தற்போதைய நிலையில் ஒருவேளை உணவை சாப்பிட்டுதான் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும். இல்லையென்றால் மேலும் பல நெருக்கடிகள் ஏற்படும்.

சஜித்தும், திகாவும் நல்ல நண்பர்கள். நல் லாட்சியின்போதும் சாதித்துக்காட்டினர். ஏழை மக் களின் தோழன் சஜித், மலையக மக்களின் நண்பன் திகா. இருவரும் இரட்டைக் குழல் துப்பாக்கிபோல் நாட்டையும், மக்களையும் காப்பார்கள். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த அரசு விரட்டியடிக்கப்படும். சஜித் தலைமையில் நல்லாட்சி மலரும். அப்போது மலையக மக்களுக்கும் விடிவு பிறக்கும்.

15 ஆம் திகதி நடைபெறும் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவோம். தூங்கும் அரசை தட்டி எழுப்பி, வீட்டுக்கு அனுப்பத் தயாராவோம். - என்றார்.

## எதிர்பாராத விதமாக தங்கம் விலை எகிறல்!

இலங்கையில் தங்கத்தின் விலை எதிர்பாராத விதமாக அதிகரித்து வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

தங்கத்தின் விலை இன்று (செவ்வாய்க்கிழமை) மேலும் அதிகரித்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள தங்க உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா - உக்ரைன் நெருக் கடியால் தங்கத்தின் விலை உயர்ந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 155,000 ரூபாவாகும்.

அத்துடன் 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 143, 500 ரூபாவாகும்.

## பள்ளத்தில் வீழ்ந்தது கப் வாகனம் நாரங்ஹின்னவில் இருவர் சாவு



தெல்தோட்டை - ஹேவாஹெட்ட வீதியில் நாரங்ஹின்ன பிர தேசத்தில் கலஹா நோக்கிச் சென்ற கப் வாகனம் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து நேற்று (திங்கட்கிழமை) மாலை இடம்பெற் றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கப் வாகனம், வீதியை விட்டு விலகி சுமார் 1,200 மீற்றர் பள்ளத்தில் விழுந்தது.

கப் வாகனத்தின் ஓட்டுநரும் அவருடன் வந்த மற்றுமொருவரும் பலத்த காயங்களுடன் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 35 மற்றும் 64 வயதுடைய குன்னாபான மற்றும் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சடலங்கள் பேராதனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

கவனக்குறைவாக வாகனத்தை செலுத்தியமையால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் கந்தரோடையில் வாழ்வாதார உதவி







சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் மகாதேவா பிரிதுவிராஜாவின் பிறந்ததினத்தை முன்னிட்டு சுன்னாகம், கந்தரோடை மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டமாக டொமினேஸி மாங் கன்றுகள், தென்னம் பிள்ளைகள், எலுமிச்சம் கன்றுகள், கொய்யாக் கன்றுகள் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் வழங்கிவைக்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வராகினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வு, அமரத்துவமடைந்த லயன் மகாதேவா வின் கந்தரோடை இல்லத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 30 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயனடைந்தனர்.

இந்த நிகழ்வில் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் கழகச் செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பி னர் லயன் செ.விஜயராஜ், சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் வசிகரன், லயன் க.தினேஸ் ஆகியோர் பங்குகொண்டனர்.

நாட்டில் பொருள்களின் விலைவாசி அதி கரித்துள்ள நிலையில், சாதாரண தர குடும்பங்கள் வாழ்க்கைச் சுமையால் பெரிதும் பாதிக்கப்பட் டுள்ள நிலையில் இவ்வாறான வாழ்வாதார உதவி அவர்களுக்குப் பெரிதும் பயனளிக்கும் வகையில் லண்டனில் வாழும் லயன் ம.பிரிதுவிராஜா தனது பிறந்ததினத்தில் இந்தத் திட்டத்துக்கு அனுச ரணை வழங்கியுள்ளார்.

## வடக்கில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயார்!

### இந்திய தூதுவர் திடசங்கற்பம்

வடக்கு மாகணத்தில் இந் தியமுதலீடுகளைசெய்வதற்குத் திட்டங்களை வகுத்து வருகி றோம் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

வடக்கு மாகாண மீனவர் களுக்கான வாழ்வாதார உத வித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தபின்னர் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

இலங்கையில் மீனவர்க ளுக்கு உதவிகளை செய்யும் முகமாக இந்திய முதலீடுகளை யும் இங்கு கொண்டுவருவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் கூறி னார்.

இதன் மூலம் மீனவக் குடும்பங்கள் வாழ்வாதாரம் மற் றும் தொழில் வாய்ப்பைப் பெற் றுக் கொள்ள முடியும் என்றும் இதற்கு அனைவரது ஒத்து ழைப்பும் தேவை என்றும் குறிப் பிட்டார்.

இதேவேளை இந்திய அரசாங்கத்தால் கட்டி முடிக் கப்பட்டுள்ள கலாசார மண்டபம் விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளது என்றும் இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரி வித்தார்.

## பாதிக்கப்பட்ட விவசாயிகளை பதிவு செய்யுமாறு கோரிக்கை

இருபாலை, மார்ச் 15

இருபாலை தெற்கு பிரதேசத்தில், கடந்த வருட காலபோக நெல் பயிர்ச் செய்கையில் போதிய விளைச்சலின்றி பாதிக்கப்பட்ட கமக் காரர்களைப் பதிவு செய்யுமாறு கமக்காரர்கள் அமைப்பு அறிவித்துள்ளது.

பதிவுகளை உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் மேற் கொள்ள வேண்டும் என்றும், பதிவு செய்ய வரும்போது ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டையும் கொண்டுவருமாறும் தெரிவிக்கப் பட்டது.

## பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு; சந்தேகநபர்களுக்கு 29 வரை மறியல்!

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு கண்டுபிடிக் கப்பட்ட சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஓய்வு பெற்ற பிலி யந்தலை வைத்தியர் மற்றும் இரண்டு சந்தேக நபர் களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை எதிர்வரும் மார்ச் மாதம் 29 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்து மாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆயுதங்கள் தொடர்பான விசார ணைகளை நடத்தி வருவதாகவும் இந்த விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை என்றும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு நீதிமன்றத்துக்கு அறிவித்தது.

விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பாக நீதி மன்றத்தில் சமர்ப்பிக்க மாற்றுத் திகதியை வழங்குமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு கோரியது. இந்நிலையில் வழக்கு விசாரணையை 29 ஆம் திகதிக்கு எடுத்துக்கொள் ளப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.03.2022இல் வெளியிடப்பெற்றது.